மாநகராட்சி மன்ற
15 - 4 - 1993

# ★ அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டக்காரர் மீது பொலிஸார் தாக்கு

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2024 சித்திரை 01 இதழ் 58
யாழ்ப்பாணம் புதன்கிழமை 14 — 04 — 1993

(லண்டன்)

இலங்கையின் தென்பகுதியில் அரசுக்கெதிராக நேற்று ஆர்ப்பாட்டமொன்றில் ஈடுபட்ட பொதுமக்கள் மீது பொலிசார் குண்டாந்தடிப் பிரயோகம் மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஸ்ரீ லங்கா பாதுகாப்புப் (8-ம் பக்கம் பார்க்க)

## முருங்கனில் 'புக்காரா' குண்டுத் தாக்குதல்

(மன்னார்)

மன்னார்-முருங்கனில் நேற்றுக் காலை புக்காரா விமானங்களிலிருந்து பொதுமக்கள் குடியிருப்புக்களை நோக்கி குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

நேற்றுக் காலை 8 00 மணியளவில் முருங்கனிலுள்ள இரட்டைக்குளம், கற்கடந்த புலம் ஆகிய பகுதிகளிலே இத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

மூன்று குண்டுகள் புக்காரா விமானங்களிலிருந்து இப்பகுதியில் வீசப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (ரி)

# யாழ். செஞ்சிலுவைச் சங்க உபதலைவர் படுகொலை;
# சிறிலங்கா அரசைக் கண்டித்து
# யாழ். நகரில் ஆர்ப்பாட்ட பேரணி

## வெள்ளிக்கிழமை நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

யாழ். செஞ்சிலுவைச் சங்க உப தலைவர் திரு. க. புவனேந்திரனின் படுகொலைக்காக சிறிலங்கா அரசைக் கண்டித்து நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை யாழ். நகரில் சமூகசேவை அமைப்புக்களின் தொண்டர்களும், பணியாளர்களும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தவுள்ளனர்.

இப்பேரணி நல்லூர் கந்தசாமி கோயில் முன்றலில் வெள்ளிக்கிழமை காலை 9-00 மணிக்கு ஆரம்பமாகும். ஐ. நா. உயர் ஸ்தானிகராலயம், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், அரசு சார்பற்ற நிறுவனங்களின் இணையம், யாழ். அரச அதிபர் ஆகியோரிடம் இப்பேரணியின் போது மகஜர் கையளிக்கப்படவுள்ளன. (2ம் பக்கம் பார்க்க)

## படையினர் வேண்டுமென்றே படுகொலை செய்தனர்!

### பொது அமைப்புக்கள் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

போர்ச்சூழலில் உயிர்காப்பு நடவடிக்கையில் ஈடுபட்ட இலங்கை செஞ்சிலுவை சங்க யாழ். கிளை உபதலைவர் திரு. க. புவனேந்திரனை சிறிலங்கா படையினர் வேண்டுமென்றே கொலை செய்துள்ளனர் என்று யாழ். மாவட்டத்திலுள்ள பொது அமைப்புகள் குற்றம் சாட்டியுள்ளன. (2ம் பக்கம் பார்க்க)

## வடக்கு-கிழக்கு பிரச்னைக்கு சமாதானத் தீர்வுதான் இன்றைய அவசிய தேவை

(கொழும்பு)

வடக்கு-கிழக்குப் பிரச்னைக்குச் சமாதானத் தீர்வு காண்பதே இப்பொழுது அவசியத் தேவையாக உள்ளதாக ஜனாதிபதி பிரேமதாசா தெரிவித்துள்ளார்.

புத்தாண்டுத் தினத்தையொட்டி நேற்று வெளியிட்ட புத்தாண்டுச் செய்தியிலேயே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாடு பிளவுபடுவதைத் தடுக்க அனைவரும் ஒன்றிணைந்து பாடுபடவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். (அ-மி)

## மட்டு. பஸ் விபத்தில் ஐவர் பலி; 25 பேர் காயம்

(மட்டக்களப்பு)

வாழைச்சேனையிலிருந்து மட்டக்களப்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த தனியார் மினிபஸ் ஒன்று நேற்றுமுன்தினம் மாலை வந்தாறுமூலையில் குடை சாய்ந்ததில் ஒரு பெண் உட்பட ஐவர் பஸ்ஸின் அடியில் நசியுண்டு பலியானார்கள்.

இச்சம்பவத்தில் காயமடைந்த 25 பேர் மட்டு. மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் இவர்களுள் 3 பேரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க-ரி)

## புலிகளின் தாக்குதலால் கடற்படை பின்வாங்கியது

(எழுதுமட்டுவாள்)

கிளாலி கடற்பரப்பில் விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலையடுத்து படையினர் பின்வாங்கிச் சென்றனர்.

கிளாலிக் கடலில் நேற்று முன்தினம் இரவு 9-30 மணியளவில் விடுதலைப்புலிகளுக்கும் கடற்படையினருக்குமிடையில் சுமார் அரைமணி நேரம் பலத்த மோதல்கள் இடம் பெற்றன.

விடுதலைப்புலிகளின் கடும் தாக்குதலையடுத்து இழப்புகளுடன் படையினர் பின்வாங்கிச் சென்றதாக தெரிவிக்கப்படுகிறது.

கிளாலி கடற்பரப்பில் ரோந்து வந்த படையினர் மீதே விடுதலைப்புலிகள் வழிமறித்து தாக்குதல் நடத்தியதாக தெரிய வருகிறது. (170)

## பெண் கைது

(திருமலை)

திருகோணமலை மாவட்டத்திலுள்ள மூதூருக்குச் சென்ற (2-ம் பக்கம் பார்க்க)

## அன்னை பூபதி நினைவாக உண்ணாவிரத நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

தியாகி அன்னை பூபதியின் 5ம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு, உண்ணா விரத நிகழ்வுகள் நாளை 15ம் திகதி தொடக்கம் எதிர்வரும் 19 திகதி வரை கீழ்க் காணும் இடங்களில் காலை 7-00 மணி தொடக்கம் மாலை 5-00 மணி வரை நடைபெறவுள்ளன.

15ம் திகதி: யாழ் இந்துக் கல்லூரி, கோப்பாய்-புத்தூர் மாவீரர் மண்டபம்.

16ம் திகதி: யாழ். இந்துக் கல்லூரி, கோப்பாய்-நீர்வேலி பிள்ளையார்கோவில் முன்பாக, மல்லாகம் பழம் பிள்ளையார் கோவில்.

17ம் திகதி: கொடிகாமம் சுட்டிபுரம் அம்மன் கோவில், புலோப்பளை கிழக்கு அ.த.க. பாடசாலை (கண்டிவீதி, நாவடி) கொடிகாமம். உடுப்பிட்டி சந்திப் பிள்ளையார் கோவில். (2-ம் பக்கம் பார்க்க)

## வடக்கு-கிழக்கு எல்லையில் உஷார் நிலையில் படையினர்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் தாக்குதல் எவ்வேளையிலும் இடம் பெறலாம் என்ற அச்சத்தில், வடக்கு-கிழக்கு எல்லைப் பகுதிகளில் படையினர் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகக் கூட்டுப் படைத் தலைமையகம் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளது.

மணலாறு, மன்னார்ப் பகுதியில் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிக்குள் விடுதலைப் புலிகள் ஊடுருவி, அதிரடித் தாக்குதல்களை நடத்திவதை அடுத்தே படையினர் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (க-ரி)

புத்தாண்டு
வாழ்த்துக்கள்

வாசகர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள், அபிமானிகள், விளம்பரதாரர்கள், விற்பனையாளர்கள் அனைவருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்!

— நிர்வாகி

## சிறுவன் அடித்துக் கொலை

### சடலம் கிணற்றிலிருந்து மீட்பு

(யாழ்ப்பாணம்)

தோட்டப்பகுதியொன்றில் விளையாடிக்கொண்டிருந்த சிறுவன் ஒருவரை அடித்துக் கொலை செய்து தோட்டவளவுக்கிணற்றில் போடப்பட்டதாகக் கூறப்படும் ஒரு சம்பவம் நேற்று முன்தினம் இடம் பெற்றுள்ளது.

காரைநகரிலிருந்து இடம் பெயர்ந்து தற்போது சுழிபுரம் வழக்கம்பரையில் தங்கியிருக்கும் செல்வன் உருத்திரகுமார் ராஜகுமார் (10 வயது) என்ற சிறுவனே அடித்துக் கொலைசெய்யப்பட்டதாக கூறப்படுகிறது.

இந்தச் சம்பவம் பற்றி தெரிய வருவதாவது.

அயலில் உள்ள ஒருவருடைய தோட்டவளவிற்குள் (8-ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

### வல்லாரைக் குளிகை

இயற்கை வல்லாரைச் சாறில் தயாரித்த GOTU-KOLA Capsules கிடைக்குமிடம் எஸ். ரி. மெடிக்கல்ஸ், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி-4072)

### சேவை

மக்கள் அபிமானத்தைப் பெற்ற ஸ்ரீலங்கா அச்சகம் ஸ்ரீலங்கா புத்தகசாலையுடன் இணையாமல் தனித்தே இயங்குகின்றதென்பதை அன்பான மக்களுக்கு தெரியப்படுத்திக் கொள்கின்றோம். ஸ்ரீகாந்தா அச்சக லேன், ராஜா தியேட்டர் அருகாமை - யாழ்ப்பாணம். (ஏ-3025)

### இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கம் 93/94

சகல மக்களினதும் பேராதரவைப் பெற்ற இரகுநாதையர் ஸ்ரீமுக வாக்கிய பஞ்சாங்கம் விற்பனையாகின்றன. சொற்ப பிரதிகளே கையிருப்பில் உண்டு. சகல புத்தகக் கடைகளிலும் கிடைக்கும். விலை 60-00 மட்டுமே. (ஏ-3041)

### மிருதங்கம்

மிருதங்க பரீட்சை எடுக்கும் மாணவர்களின் மிருதங்க திருத்த வேலைகள் மிக விரைவில் நல்ல முறையில் மலிவாக செய்து கொடுக்கப்படும். கோவிந்தபிள்ளை விஜயகுமார் பெருமாள் கோவிலடி, யாழ்ப்பாணம். (சி-4090)

### ஒரே ஒரு நூல்

அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் முதலாம்பிள்ளை 30/- இன்று விற்பனையாகின்ற ஒரேயொரு வானொலி நாடக நூல். இந்த நாடகங்களை மாணவர்களும் நடிக்கலாம். (சி-4030)

### பயிற்சி

Basic, d Base I + Lotusg 1, 2, 3, Word Processin பயில விரும்புவோர் தொடர்பு கொள்ளவும். Unikco Computer Center, 37, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (ஏ-3020)

### தேவை

கொரிலிக்ஸ், வீவா, பேரிக்கிலில் தேவை. நபர் மூடியுடன் கூடியது. Taste Line Industries (PVT) Ltd. No: 14, Seenier Lane, Jaffna. (A-3024)

### மணமக்கள் தேவையா

எம்மிடம் உங்களுக்குத் தேவையான மணமக்கள் பலர் இருக்கிறார்கள். சந்திப்பு ஞாயிறு காலை. மங்களா ஏஜென்சி, கொய்யாத் தோட்டம். (சி-8)

### புலமைப் பரிசில் (ஆண்டு 5)

வருடா வருடம் சிறந்த பெறுபேற்றை பெற்றுத்தரும் நிறுவனத்தால் வெளியிடப்படும் ஆண்டு 5 புலமைப் பரிசில் வினாத்தாள் (தமிழ், கணிதம், ஆங்கிலம்) 18-04-93 ஞாயிறு வெளியிடப்படும். விடையளித்து தந்தால் திருத்திக் கொடுக்கப்படும். புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (சி-4)

### வைத்தியம்

செங்கண்மாரி, குடற்புண், தொய்வு, வாதரோகங்கள், வலிப்புநோய், பீநிசம், தலையிடி, தலைசுற்றல், சரும நோய்கள், மாதவிடாய்க் குத்து, இரத்தப் போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, வீரியக் குறைவு மூலவியாதிகள், மூத்திரரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்தியகலாநிதி கி. இராசரத்தினம் 121, 2-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (சி-7)

### இன்று

(யாழ்ப்பாணம்)

இலங்கைபெந்தெகொஸ்தே சபை யாழ் கிளையின் விசேட ஆராதனை இன்று யாழ் நகரில் நடைபெறவுள்ளது.

இன்று எழுப்புதல் கூட்டங்களும் சுவிசேஷ தெய்வீக ஆராதனைகளும் காலை முதல் மாலை வரை நடைபெறவுள்ளது. (வி)

0 0 0

அரியாலை!

யாழ். ஸ்ரான்லி வீதியில் புகையிரத நிலைய பின்பக்கமுள்ள பகுதியில் யாழ் புதிய பஸ் நிலைய திறப்புவிழா இன்று 14-ம் திகதி நடைபெறுகிறது. (59)

### அன்னை பூபதி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

18ம் திகதி: நல்லூர் திருநெல்வேலி தலங்காவில் பிள்ளையார் கோவில், யாழ். முலவைச் சந்தி, சண்டிலிப்பாய் சுதுமலை அம்மன் கோவில், உடுவில் மயிலன் முருகமூர்த்தி கோவிலடி, சங்கானை பஸ் நிலையம், கைதடி நாவற்குழி ஸ்ரீமுருகன் சனசமூக நிலையம் முன்பாக, நுணுவில் மேற்கு பொன்னம்மாவ குடியேற்றத் திட்டம், சரவெட்டி கிழவித் தோட்டம் பிள்ளையார் ஆலயம், பருத்தித்துறை ஆத்தியடிப் பிள்ளையார் கோவில், யாழ். இந்துக் கல்லூரி.

---

ஓம்சக்தி

தமிழர் வாழ்வில் ஒளி பெற்றிட
ஸ்ரீமுக புத்தாண்டினை வருகவென
வாழ்த்துகிறோம்

கந்தர்மடம் இந்து மகளிர் கல்லூரி ஒழுங்கை பத்திரகாளி, சிவன் சக்தி தெய்வீக வைத்திய அருள் வாக்கு ஆலயத்தினர்.

ஸ்ரீமுக புத்தாண்டில் பத்திரகாளி அம்பாள் சிவன் சக்தி அடியவர்களுக்கும், தொண்டர்களுக்கும் எல்லா ஐஸ்வரியங்களுக்கும் தெய்வீக கடாட்சம் கிடைக்க திருவருள்பாலிப்பாராக

அருள்சொரியும் பத்திரகாளி அம்பாள் சிவன்சக்தி தெய்வீக வைத்திய அருள்வாக்கு ஆலயத்தினர்.

35/3, இந்து மகளிர் கல்லூரி ஒழுங்கை
கந்தர்மடம்

(சி-3052)

---

அனைவருக்கும்
எமது

## புத்தாண்டு வாழ்த்துக்கள்

அனித்தா பயிற்சி நிலையம்

- ★ Sugar Craft
- ★ Bridal makeup
- ★ Cookery
- ★ Hair style
- ★ Facial
- ★ Needle work
- ★ Cake Icing
- ★ Flower making

வகுப்புகள் தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

**அனித்தா பயிற்சி நிலையம்**
பூநாறி மரத்தடி.
கே. கே. எஸ். வீதி, கொக்குவில்

---

# 'எவர் விஷன்'

அன்பர்கள் ஆதரவாளர்கள்
வாடிக்கையாளர்கள்
மற்றும் ஏனையோர்களுக்கும்
எமது

## புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்

- ★ உங்கள் இல்லங்களில் நிகழும் மங்கல நிகழ்வுகளைப் பல வருட அனுபவம் பெற்றவர்களால் தத்ரூபமாகக் குறைந்த செலவில்
- ★ வீடியோ படம் எடுப்பதற்கும்
- ★ புகைப்படங்கள் (கலர்) எடுப்பதற்கும்
- ★ நீங்கள் எடுத்த வீடியோ படங்களில் சிறந்த முறையில் Mixing செய்வதற்கும்
- ★ வீடியோ கமராக்களையும் T. V. டெக் போன்றவற்றை உத்தரவாதத்துடன் உடனுக்கு உடன் திருத்திக்கொள்வதற்கும்

# எவர் விஷன்

21, மணிக்கூண்டு வீதி,
யாழ்ப்பாணம்

(சி-4083)

---

### சைக்கிள் திருட்டு

(பண்டதரிப்பு)

பண்டத்தரிப்பைச் சேர்ந்த தம்பித்துரை என்பவரின் 6 ஆயிரம் ரூபா பெறுமதியான சைக்கிள் சோண்டாவிலுள்ள தேனீர் கடை ஒன்றின் முன் நிறுத்திவைக்கப்பட்டிருந்தபோது திருட்டுப் போயுள்ளது. (72)

### பெண்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டிருந்த பெண்ஒருவரை மூதூர் ஈ. பி. எவ் முகாமிலுள்ள ஸ்ரீலங்கா இராணுவத்தினர் கைது செய்துள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இச்சம்பவத்தில் கடைப்பரிசான் 7ம் வட்டாரத்தைச்சேர்ந்த மூன்றுபிள்ளைகளின் தாய் ஒருவரே இராணுவத்தால் கைது செய்யப்பட்டவராவார். (வி)

### யாழ் செஞ்சிலுவை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று மாலை யாழ். வை. எம். சி. ஏ. மண்டபத்தில் நடைபெற்ற முக்கிய கூட்டமொன்றில் இம் முடிவு எடுக்கப்பட்டது.

சமூகசேவை அமைப்புகளின் தொண்டர்கள் பணியாளர்கள் அனைவரும் தங்கள் சீருடைகள், அடையாளச்சின்னங்களை அணிந்து இப்பேரணியில் கலந்து கொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (ரி-159)

### படையினர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அச்சுவேலியில் கடந்த சனிக்கிழமை சிறிலங்கா படையினரால் செஞ்சிலுவைச் சங்க உபதலைவர் கொல்லப்பட்டமையைக்கண்டித்து அதிருப்தி தெரிவிக்கும் முகமாக நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றிலே இவ் அமைப்புகளின் பிரதிநிதிகள் இக்குற்றச்சாட்டைத் தெரிவித்தனர்.

ஜெனீவா ஒப்பந்தப்படி போர்சூழலில் உதவி புரிவதே தொண்டர்களின் உரிமை எனவும் ஊரடங்கு அமுலில் இருந்தாலும் உதவிப் பணி புரியும் உரிமை அவர்களுக்கு உண்டு எனவும் இக்கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

ஸ்ரீலங்கா இராணுவத்தினர் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்ததாகத் தவறான கருத்தைக் கூறி வருகின்றனர். ஊரடங்குச் சட்டம் பற்றிய எவ்வித முன்னறிவித்தலும் வழங்கப்படவில்லை எனவும் இக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

ஸ்ரீலங்கா அரசின் இக்காட்டுமிராண்டித்தனமான செயலை வெளியுலகிற்குத் தெரியப்படுத்த வேண்டும் எனவும் உலகில் 165 நாடுகளில் உள்ள செஞ்சிலுவைச் சங்கக் கிளைகளுக்கும் இந்த விடயம் தெரியப்படுத்தப்பட வேண்டுமெனவும் தொண்டர்கள் பலரும் தெரிவித்தனர். (வி)

---

புத்தாண்டு சகலருக்கும் சகல வளங்களையும் வாரி வழங்கட்டும்!!

★ அலைகடலென ஆர்ப்பரிக்கும்

★ அழகுகோலமாகத் திகழும்

★ வர்ண வர்ண சேலைத்தினிசு வகைகளுக்கு

# சீமாட்டி

[ஜவுளி சமுத்திரம்]
102, மின்சாரநிலைய வீதி,
(மேல்மாடி) யாழ்ப்பாணம்.



---

ரேஸ்ரி வெற்றுப் போத்தல்களை ஒப்படைத்து பரிசில்களை வென்றெடுங்கள் ரேஸ்ரி

# ஸ்ரீமுக வருஷத்தில் மேஷம், கன்னி தனுசு இராசியினர் நற்பலன் அடைவர்

பிறந்துவிட்ட ஸ்ரீமுக வருடத்தில், கும்ப ராசியில் சனியும், கன்னி ராசியில் குருவும், பின்னர் துலா ராசியிலும், இராகு விருச்சிக ராசியிலும், கேது இடப ராசியிலும் சஞ்சாரம் செய்வர். மற்றைய மாதக் கோள்கள் வழமையான சஞ்சாரத்தில் ஈடுபடும்.

★ மேடம்

சுறுசுறுப்பும் துணிச்சலுமிக்க மேடராசியினருக்குப் பிறந்துவிட்ட புத்தாண்டு தொழில் உயர்வைத் தரும். அனாவசியச் செலவுகள் குறையும். சகோதர வகை லாபமுண்டு. உறவினர் நன்மையுண்டு. திருமணயோகமுண்டு. வெளிநாட்டுப்பலன் அதிகமாகும். வேலைப்பளு குறையும். பதவி உயர்வுண்டு.

★ இடபம்

இன்முகத்துடன் எதனையும் ஏற்கும் இடபராசியினருக்கு முதலீடுகள் அதிகரிக்கும். தொழில் சிறப்படையும். உறவினர் தொல்லையுண்டு. வீடு மாற்றமுண்டு. குடும்ப வேற்றுமையுண்டு. வேலைப்பளு அதிகரிக்கும். அன்னியர் போதிய அளவு ஒத்துழைப்புத் தருவர். சகல பணிகளிலும் நிதானமாக இருப்பது அவசியம்.

★ மிதுனம்

மிதமான போக்கும், விட்டுக் கொடுக்கும் மனப்பபன்மையும் கொண்ட மிதுன ராசியினருக்கு கடன்கள் கட்டுக்கடங்கும். தொழிலில் நிம்மதி பிறக்கும். பிதுர் சொத்துக்கள் விக்லங்கம் அகலும். உடல் நலனில் அக்கறை தேவை. சகோதர மனக்கசப்பு நீங்கும். கணவர் மனவேதனை அகலும். வெளிநாட்டுப் பயணங்கள் கைகூடும். பணவருவாயுண்டு.

★ கடகம்

வாழப் பிறந்த கடகராசியினருக்கு குடும்பச் சுமை அதிகரிக்கும். வாக்குவன்மையால் பணம் புரளும், குடும்

ஜோஸ்யர்

பத்தில் வாய்ச்சண்டை உருவாகும். உறவினர் சுகக் குறைவுண்டு. தெய்வபக்தி அதிகரிக்கும். அதிகாரிகள் துன்பம் தருவர். மாமியாரின் கெடுபிடி நிம்மதியின்மையை கொடுக்கும். புத்திர வழியில் மனவேதனையும், அலைச்சலும் உண்டு.

★ சிங்கம்

சீரான குணமும், கூர்மையான மதியும் மிக்க சிங்க ராசியினருக்கு தொழில் துறைகளில் மிகுந்த கவனம் தேவை. பணப்புழக்கம் அதிகமாகும். தேவையற்ற பயணங்கள் இருக்கும் சுற்றத்தார் வெறுப்பு அதிகமாகும் சகோதர மனஸ்தாபம் உண்டு. தொழில் ஸ்தானங்களில் சற்றே தேக்கத்துக்கு உரியவராகும் வாய்ப்புண்டு. வேலைப்பளு அதிகமாகும். இடமாற்றம் உண்டு

★ கன்னி

வாழ்வெல்லாம் மனங் கலங்கும், கன்னி ராசியினருக்கு உடன் தொல்லை நீங்கும், கவலைகள் மறையும், தொழில் பிரகாசமாகும். உறவினர் இணைந்துகொள்வர், தொழில் ரீதியில் மாற்றமுண்டு, குடும்ப ஒற்றுமை அதிகமாகும், திருமண யோகம் உண்டு, வெளிநாடு செல்ல வாய்ப்பு உருவாகும், எதிர் பார்த்த நன்மைகள் கிட்டும், எந்த முயற்சியும் வெற்றியைத் தரும்.

★ துலாம்

தாளமுடியாத துன்பம் வந்த போதும் மனம் குலையாத துலா ராசியினருக்கு தொழில் துறைகளில் லாபம் அதிகரிக்கும், இனசனப்பகை அகலும், பணியாட்கள் ஒத்துழைப்புத் தருவர். திருமணப் பேச்சுக்கள் நன்மை தரும் குடும்ப அன்னியோன்னியம் அதிகமாகும், வாக்குவாதங்கள் தொல்லை தரலாம், சகோதர வகையில் கப விரயமுண்டு, கல்வியில் தடைகள் உண்டு, அதிகாரிகளுடன் இணைந்து செல்வது அவசியம்.

★ விருச்சிகம்

வீரமும் விவேகமும் உள்ள விருச்சிகராசியினருக்கு ஊதிய உயர்வுண்டு. பணப்புழக்கம் அதிகமாகும். தொழிலில் ஓய்வு இருக்காது. குடும்பத்தில் மகிழ்ச்சிநிலவும். புத்திரர் சம்பந்த வகை நல்லமுடிவு தரும். மனைவாங்கும் யோகமுண்டு கல்வியில் பெருமையுண்டு எதிலும் அமைதியைக் காணலாம்.

★ தனுசு

சோதனைமேல் சோதனை போதுமடா என ஏங்கும் தனுசு இராசியினருக்கு இவ்வாண்டு ஏராளமான பணப் புழக்கமுண்டு பெண்கள் ஆதரவுண்டு. குடும்ப மோதல் சீரடையும் உறவினர் விரோதமுண்டு. இலருக்கு திடீர் திருமணமுண்டு. கல்வியில் உயர்வு உண்டு உடல் நோய்களினூடு அவஸ்தையுண்டு வெளிநாட்டில் இருந்து நல்லசெய்தி கிட்டும்.

★ மகரம்

பேரும் புகழும் இங்கேயேக் வாழ்ந்தென்ன பயனென எண்ணும் மகரராசியினருக்கு தொழில் முன்னேற்றமுண்டு. வர்த்தகருக்கு மதிப்புயரும். நம்பிமோசம் போகும் பலனுண்டு. விரும்பிய இடமாற்றமுண்டு. குடும்பத்தில் அமைதிக்குறைவு, சில சமயங்களில் உருவாகும். கண் சம்பந்தமான நோய் காட்டும்

(6-ம் பக்கம் பார்க்க)

மங்களம் பொங்கும் புத்தாண்டில் சகலருக்கும் இனிய

புத்தாண்டு வாழ்த்துக்கள்

இதயத்தை கொள்ளைகொள்ளும் சகலவிதமான பட்டுப் பருத்தி பிடவைகளுக்கு—— ———

கணேசன் ஸ்ரோர்ஸ்

(ஜவுளி சாம்ராஜ்யம்)

63-78, கே. கே. எஸ். வீதி

யாழ்ப்பாணம்

ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது

புத்தாண்டு வாழ்த்துக்கள்

★ அன்பளிப்புப் பொருட்கள்
★ மின்சார உபகரணங்கள்
★ பிளாஸ்ரிக் பொருட்கள்
★ எவர்சில்வர் வகைப் பொருட்கள்

சகாய விலையில் பெறவேண்டிய ஸ்தாபனம்

கோல்டன் ரி. வி. றேடீஸ் சென்ரர்

2 A, ஸ்ரான்லி வீதி

யாழ்ப்பாணம்

எல்லா வளங்களும் எல்லோருக்கும் கிடைக்க இனிய

புத்தாண்டு வாழ்த்துக்கள்

★ சகல வகையான உணவுப் பொருட்கள்
★ பாலுணவுப் பொருட்கள்
★ அத்தியாவசியப் பொருட்கள்
★ சகல தமிழ் தினசரி சஞ்சிகைகள்

விற்பனை செய்பவர்கள்

சிவன் ஸ்ரோர்ஸ்

வளாகச் சந்தி, திருநெல்வேலி.

எங்கள் வாடிக்கையாளர்கள் அன்பர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது உளம்கனிந்த

புத்தாண்டு வாழ்த்துக்களை

தெரிவித்துக்கொள்கிறோம்.

எரிக் கணேஷ்

566, ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம்

வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மூக்குக் கண்ணாடி வகைகளுக்கு மேலும் நாடுங்கள்

அன்பர்கள் ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்

புத்தாண்டு வாழ்த்துக்கள்

சகல றேடியோ திருத்த வேலைகளுக்கும் நம்பிக்கைக்குரிய ஸ்தாபனம்

றேடியோ மனுவல்

121, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

ஸ்ரீமுக வருஷ புத்தாண்டு வாழ்த்துக்கள்

சகல சௌபாக்கியங்களும் பெற்று இன்புற்று வாழ்க

சோதிடவிலாச புத்தகசாலை

46, பெரியகடை, யாழ்ப்பாணம்.

ரேஸ்ரி நெல்லிகிறஸ், ரேஸ்ரி கோடியல்ஸ், ரேஸ்ரி ஜாம்

சங்கே முழங்கென சங்கநாதம்
ஒலிக்க அனைவருக்கும் இனிய
புத்தாண்டு வாழ்த்துக்கள்
ஜவுளிக் கடலென
மக்களே கூறும் ஸ்தாபனம்

**குமார் புடவை மாளிகை**

முத்திரைச் சந்தி,
நல்லூர்.


# சித்திரைப் பு

# அனைவருக்கும் சு

நித்தமும் கவலைமோதல்
நிம்மதி இழந்த வாழ்வு
எத்தனை துயரம் துன்பம்
எய்திடும் இந்த நேரம்
சித்தமே மகிழச் செய்ய
சிறந்த நல் வழிகள் காட்ட
சித்திரை வரட்டும் வந்து
சிரித்திட விடைதரட்டும்......

என்றே எம்கவிஞன் பாடிய பாடல் எவ்வளவு பொருத்தம். இன்றே அந்நிலைதான். ஆண்டுகள் வருவதும் போவதும் காலத்தின் நியதி. என்று தான் நிம்மதியென்ற பெருமூச்சின் வெளிபாட்டிலும், சித்திரை பிறந்தால் தொல்லைகள் தொலைந்திடும் என்பதை இன்றும் இந்துக்கள் நம்புகின்றனர்.

புதுவருடப் பிறப்பு சகல இனமக்களாலும் விரும்பி கொண்டாடப்பட்டுவரும் பெருவிழாவாகும். சூரியபகவான் மீன ராசியைக்கடந்து மேடராசிக்குள் பிரவேசிக்கும் நாளே சித்திரைப் புத்தாண்டாகும். இன்றையநாள்இராப் பகல்சமமாக இருப்பதால் இத்தினத்தை விஷுபுண்ணியகாலமாக இந்துக்கள் அனுஷ்டிக்கின்றனர்.

வானியல் சாஸ்திர விஞ்ஞானயுகம் ஆரம்பிப்பதற்கு முன்னர் தமிழ் மக்கள் மேடராசியை முதலாகவைத்து வருடத்தைக் கணிக்க தொடங்கினர். இன்று நமது பாவனையில் இருக்கும் ''கிறகோரியன்'' கலண்டர் ஆக்கப்படுவதற்கு பல ஆயிரம் வருடங்க

ளுக்குமுன்னர் தமிழ் மக்க
இராசிவட்டத்தைக் கொண்டு
வருடத்தைக் கணித்தனர்.
பிரபவ ஆண்டு முதல் அக்ஷ
ஆண்டு வரையுள்ள அறுபது
ஆண்டுகளைக்கொண்டது. இ
துக்களின் ஆண்டுச்சக்கரம்



இவ்வாண்டு ஸ்ரீமுக வருட
மாகும். பிறக்கின்ற ஒவ்வோர்
ஆண்டும் எங்கள் வாழ்வில்
புதிய திருப்பத்தைத்தருமென்
பதில் அனைவரும் ஒன்று
பட்டே இருக்கின்றனர். இத
னால் மக்கள் அனைவரும் பிறக்
கும்ஆண்டை குதூகலமாக
கொண்டாடி மகிழ்வது இயல்
பாகிவிட்டது.
புத்தாண்டு இந்து மதத்
தோடு தொடர்புபடுத்தப்பட்
டாலும் மற்றைய மதத்தவ
ரும் இப்பெருவிழாவைமகிழ்ச்
யுடன் கொண்டாடுவது
இயல்பு. தனிமனிதன் குடும்

## ஸ்ரீமுக ஆண்டே வருக!

இன்று பிறக்கும் ஸ்ரீமுக ஆண்டே
உந்தன் வரவு உன்னதம் ஆகுக
இன்பம் பிறந்து இன்னல் மறைந்து
எங்கள் வாழ்வில் விடிவது தோன்றி
நன்றே இந்த நாநிலம் தனிலே
நிறைவுடன் வாழும் நிலையே நிலவ
என்றும் வேண்டும் அமைதித் தென்றலே
எங்கும் வீசிடச் செய்வாய் நீயே!

நாயன்மார்கட்டு. ப. மகேந்திரதாசன்

## நல்லை ஆதீனம் வாழ்த்து

அருளொளிக்கும் மெய்யன்பர்
களே. ஸ்ரீமுக வருடப்பிறப்
அதன் நாமத்துக்கேற்ப திருப்
பொலிவு உண்டாகும். போரி
கால சூழ்நிலையில் வாழ்ந்து
கொண்டிருக்கும் நாம் இடைய
விரும்புவது, மனஅமைதி
சுபீட்சமான இன்ப
வாழ்வு. எனவே நாம்
திரிகரண சுத்தியுடனு
ஒருமையுடனும் திடசித்த
துடனும் இறைவனின் திருவ
ருளை வேண்டுவதல்லா
வேறொன்றில்லை.
எல்லோருக்கும் எமது புத்
தாண்டு நல்வாழ்த்துக்களையும்
உளமார்ந்த நல்லாசிகளையும்
வழங்குகின்றோம்.
என்றும் வேண்டும் இன்ப
அன்பு.

ஸ்ரீலஸ்ரீ
குருமஹாசந்நிதானம்.


இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்

புத்தாடைகளுக்கு நிலையான
ஸ்தாபனம்

**யோகாஸ் புடவை மாளிகை**

16B பெரிய கடை யாழ்ப்பாணம்

இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்

ஆயிரம் ஆயிரம்
பிடவை வகைகளுக்கு

**கஜகரன் புடவை மாளிகை**

10 பெரிய கடை வீதி, யாழ்ப்பாணம்,

அன்பர்கள் ஆதரவாளர்கள் வாடிக்கை
யாளர்கள் அனைவருக்கும் இனிய
புத்தாண்டு வாழ்த்துக்கள்




எமது மண்ணில் போஷாக்கின்மையை
போக்கும் ஒரே சமவிகித உணவு

**ஜீவாகாரம்**

அனைத்து அண்ணாகோப்பி மக்கள்
கடைகளிலும் ஒரேவிலையில்
பெற்றுக் கொள்ளலாம்

இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்

அழகு சாதனப் பொருட்கள்
அன்பளிப்புப் பொருட்கள்
ஒப்பனைப் பொருட்கள்
அனைத்துக்கும்

**இராஜேஸ்வரி**
**ரேடர்ஸ்**

பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி

பிறக்கும் புத்தாண்டு சகல வளங்களையும் வழங்க அனைவர்க்கும் இனிய புத்தாண்டு

**நல்வாழ்த்துக்கள்**

ஆங்கில மருந்து விற்பனையில் தமிழ் மக்களின் அபிமானம்மிக்க
ஸ்தாபனம்

**பரணி மருந்துச்சாலை**

456, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

ரேஸ்ரி தயாரிப்பாளர்கள் புதுவருடவாழ்த்துக்களை

# ...தாண்டு ...ட்சம் தரும்

...னத்தோடும் பின்னிப்பிணைந் ...ருப்பதால் புத்தாண்டு தினத் ...ல் குடும்பத்தோடும் சமூகத் ...தாடும் சேர்ந்து மகிழ்ச்சி ...பாக்க கொண்டாடுகிறோம். ணம் பண கொடுக்கல் வாங் கல், தொழில் முயற்சிகளை ஆரம்பித்தல் போன்ற பல நிகழ்வுகள் மூலம், இந்துமத பண்பாடுகளைப்பேண புத் தாண்டு பண்டிகை வழிகோலு

## ஐயா. சச்சிதானந்தம்

இறைவனை வழிபடுவது ...ட்டுமல்லாமல், தனது சமூ ...த்தோடு சேர்ந்து புத்தாடை ...ணிதல், சுற்றம் தழுவுதல், ...டிக்குலாவுதல், விருந்துண் கின்றது. தமிழினம் தனது பண்பாட்டு உணர்வுகளை பகிர்ந்து கொள்வதற்கு இப் பண்டிகை பொருத்தமென லாம்.

## வங்கியில் கைவிசேடம்

(உடுவில்)

மானிப்பாய் மருதடி விநாயகர் கோவில் தேர் திருவிழா வாகிய இன்று புதன்கிழமை காலை 9 மணி முதல் 11 மணி வரை மானிப்பாய் இலங்கை வங்கிக் கிளையினுள் நிறுவப் பட்டுள்ள விசேட கருமபீடத் தில் கணக்குகள் ஆரம்பிப்ப வர்களுக்கு இலங்கை வங்கி மாவட்ட முகாமையாளர் திரு. கணசமூர்த்தி கைவிசேடம் வழங்குவார். (109)

0 0

(பருத்தித்துறை)

பருத்தித்துறை இலங்கை வங்கிக் கிளையிலும், பருத் தித்துறை தேசிய சேமிப்பு வங்கியிலும் புதுவருட தின மான இன்று 14ம் திகதி காலை வாடிக்கையாளர்களுக்குக் கைவிசேஷம் வழங்கும் புட வடிக்கை இடம்பெறுமென வங்கிகள் அறிவித்துள்ளன.

பிறந்துவிட்ட புத்தாண்டு அனைவருக்கும் சுபிட்சம் தரு மென்பதில் ஐயப்பாடு இருக்க முடியாது.


"சின்னச் சின்ன ஆசைகள்"
அனைவருக்கும் நிறைவேற
புத்தாண்டில் கட்டியம் கூறுகிறோம்

நல்வாழ்த்துக்கள்!



தரமான இமிரேஷன்
கோல்ட் கவரிங் நகைகள்
மணப்பெண் சோடனைகள்
லேஸ், நூல் வகைகள்
சிறுவர் விளையாட்டுப் பொருட்கள்
உள்நாட்டு, வெளிநாட்டு அழகு சாதனங்கள்

அனைத்தும் மொத்தமாகவும்
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்

ஜெயா
அழகு சாதன மாளிகை
177A, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.

ஜெயா பென்ஸி ஹவுஸ்
160, நவீன சந்தை (உட்புறம்)
யாழ்ப்பாணம்.

ஜெயா
25-48, பெரிய கடை, யாழ்ப்பாணம்.

அன்பர்கள் ஆதரவாளர்கள் வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்
ஒருமுறை விஜயம் செய்யுங்கள்
தொடரும் உங்கள் தேவை எங்கள் சேவையாகவே இருக்கும்
★ ஸ்ருடியோ படப்பிடிப்பு வீடியோ படப்பிடிப்பு
★ வெளிப்புற படப்பிடிப்பு
பலவருட அனுபவமிக்க கொண்ட கலைஞர்கள் மூலம் தரமான சேவையை வழங்கும் ஸ்தாபனம்
கே. எஸ். ஆர். போட்டோஸ்
766, காங்கேசன்துறை வீதி,
தட்டாதெருச் சந்தி, யாழ்ப்பாணம்.

மலரும் புத்தாண்டே!! சகலருக்கும் எல்லா வளங்களும்
கிடைக்க வாழ்த்துகின்றோம்!!!
ருசியின் சுவை லிங்கம் ஐஸ்கிறீம்
வீடு வாசல்கள் எல்லாம் 'லிங்கம்' பற்றியே பேசுகின்றனர்
ஆஹா சுவையோ சுவை
லிங்கம் கூல்பார்
வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம்

ஸ்ரீமுக வருஷம் சகல மக்களுக்கும் சமாதானத்தை வழங்க
வாழ்த்துகிறோம்
கண்ணைக் கவரும் வர்ணப் புகைப்படங்களை தத்ரூபமாக படம்பிடித்துத் தரும் ஒரே நிறுவனம்
பேபி போட்டோ
(மழலை புகைப்பட நிலையம்)
புகைப்படக்கலை நிபுணத்துவ சேவை,
வளாக சந்தி திருநெல்வேலி.



...ாடிக்கையாளர்களுக்கு தெரிவிக்கிறார்கள்- 'ரேஸ்ரி'

## மண்ணெண்ணெய் விநியோகம்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் சங்க கிளைகள் மூலம் மூன்றாவது கட்டமாக மண்ணெண்ணெயை பங்கீட்டு அட்டைக்கு ஒரு அட்டைக்கு ஒரு லீற்றர் வீதம் விநியோகித்து வருகின்றது. (72)

## மதிப்பீட்டு படிவம்

(பண்டத்தரிப்பு)

இராணுவ நடவடிக்கையினால் இடம்பெயர்ந்த சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த குடும்பங்களுக்கு புனரமைப்பு, புனர்வாழ்வு அமைச்சின் மதிப்பீடு படிவம் இக்குடும்பங்கள் தற்போது குடியிருக்கும் கிராம அலுவலர் மூலமாக வழங்கப்பட்டு வருகின்றது. (72)

## ஸ்ரீமுக வருஷத்தில்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

### கும்பம்

சிரித்துச் சிரித்து தம்காரியம் நிறைவேற்றும் சுயநலவாதிகளான கும்பராசியினருக்குத் தொழிலில் அலைச்சலுண்டு. உறவுகள் மோசமாகும். பண நிலைபாதிப்படையும். மனைவி சம்பந்தமான துன்பம் அதிகமாகும். அதிகாரிகளை பகைப்பது கேடு தரும். நண்பர்கள் விட்டுவிலகுவர். புத்திரர் கவலை அதிகரிக்கும். எதிலும் நிதானமாக நடப்பது அவசியம்.

### ★ மீனம்

இந்தப் பூனையும் பால் குடிக்குமா? என கேட்பவர்களுக்கு எவ்வழியாலும் பாதபூஜை செய்தாவது காரிய மாற்றும் மீன இராசியினருக்கு சோதனைகள் தலைதூக்கும். இனசன கசப்புணர்வுண்டு. வருவாய் மந்தமாகும். கால், மார்புவலி உருவாகும். பணியில் கவனம் தேவை. இடமாற்றமுண்டு. மனக்கவலை அதிகமாகும். பணிபுரியுமிடத்தில் பகைமையுண்டு. அமைதிவழியில் செயல்படுவதுவிடிவைத்தரும்.

## அன்பளிப்பு

(எழுதுமட்டுவாள்)

சாவகச்சேரி மகளிர் கல்லூரிக்கு 18,000 ரூபா பெறுமதியான நீர் இறைக்கும் இயந்திரத்தை சாவகச்சேரியைச் சேர்ந்த திரு. ச. நடராசா அன்பளிப்பாக வழங்கியுள்ளார். (170)

## பொதுக்கூட்டம்

(நெல்லியடி)

ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவர்மன்ற பொதுக்கூட்டம் 18ம் திகதி ஞாயிறு காலை 10மணிக்கு பூரணம்பிள்ளை மண்டபத்தில் தலைவர் டி. ஆர். அருமைநாயகம் தலைமையில் நடைபெறும். (160)


ஆதரவாளர்கள் வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் எமது
புத்தாண்டு வாழ்த்துக்கள்
சகல வைபவங்களுக்கும்
ஓடருக்குச் சிறந்த முறையில்
பலகாரவகைகள் இனிப்புப்
பண்டங்கள்
குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும்

**ரவர் கோப்பி**
**அன் கூல்பார்**

324, மணிக்கூட்டு கோபுர வீதி,
வெலிங்டன் சந்தி,
யாழ்ப்பாணம்.





சீரும் அமைதியும் சிறப்புடன்
விளங்கிப்
பேர்பெறு ஸ்ரீமுக வருடம்
வருக வருகவே

மரங்கள் நட்டு மழைவளம் பெருக்குவோம்
மில்க்வைற் சலவைத்தூள் வெற்றுப் பக்கற்
பத்துத்தந்து மரக்கன்று ஒன்று பெறவும்.

**"மில்க்வைற்"**



**புத்தாண்டு வாழ்த்துக்கள்**


எமது அன்பர்கள், ஆதரவாளர்கள்,
வாடிக்கையாளர்கள் யாவருக்கும்
மலரும் புத்தாண்டில்
துன்பங்கள் நீங்கி இன்பங்கள் பெருகி
சமாதானத்துடன் வாழ்கவென
வாழ்த்துகிறோம்!

**கலக்சி**
**புகைப்பட**
**சேவை**

337, 1ஆம் மாடி
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.



ஆத்ம ஞானிகளின் ஆசிர்வாதத்துடன் ஈழ மண்ணில் ஸ்தாபிக்கப்பட்ட
'ஈழநாடு' புத்தாண்டில் பொலிவுற வாழ்த்துவதோடு வாடிக்கையாளர்களுக்கும்
இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்
மீண்டும் வாகன உதிரிப்பாக விற்பனையை ஆரம்பித்துள்ளோம். டீசல்
ஒக்ஸ்போட் (Pistons, Rings) உதிரிப் பாகங்கள் கையிருப்பில் இருக்கிறது
என்பதை அறியத்தருகிறோம்.



**ஜெனரல்**
**மோட்டோஸ்**

உரிமையாளர்: சி. மகேந்திரன்
வளர்மதி கட்டிடம், பரமேஸ்வராச் சந்தி
திருநெல்வேலி



அன்பர்கள், ஆதரவாளர்கள் வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது
உளம் கனிந்த புத்தாண்டு வாழ்த்துக்கள்!



35, வருடங்களாக சைவஉணவு வகைகளின் தன்னிகரற்ற உணவு ஸ்தாபனம்

**ஸ்ரீ தாமோதர விலாஸ்**

காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.



வாடிக்கையாளர்களுக்கும், அன்பர்களுக்கும் எமது
இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்!



★ 18 20 கரட் நகைகள் உடன் பெற்றுக்கொள்ளலாம்
★ 22கரட் நகைகள் ஓடருக்கு செய்துகொடுக்கப்படும்
★ மங்கையர்களுக்கான கால் கொலிசு உடன் பெற்றுக்கொள்ளலாம்.

**கயல்விழி நகைப் பூங்கா**

தங்கப்பவுண் நகை வியாபாரம்

224/B, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



ரேஸ்ரி கோப்பி சொக்கலேட், ரேஸ்ரி மில்க் சொக்கலேட் ரேஸ்ரி ரேக்கிஸ்ற்டிலைட்

# தேசிய பாடசாலையாக தரம் உயர்த்தப்பட்ட யா / சாவகச்சேரி இந்துக்கல்லூரி சிறப்பிதழ்

## சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு எனது வாழ்த்துக்கள்

சாவகச்சேரி இந்துக் கல்லூரி 1993 பெப்ரவரி 16ம் திகதி தேசிய பாடசாலையாக தரம் உயர்த்தப்பட்டமையை யிட்டு மகிழ்ச்சியும் பெருமையும் அடைகின்றேன் இன்று ஏறத்தாழ இரண்டாயிரம் மாணவர்கள் இங்கு கல்வி பயில்கின்றனர். வடமாகாணத்தில் இரண்டு கல்லூரிகள் மட்டுமே குறிப்பாக யாழ்ப்பாண நகரத்தில் தேசிய பாடசாலைகளாக இருக்கும் வேளையில் மூன்றாவது தேசிய பாடசாலையான சாவகச்சேரி இந்துக்கல்லூரி கலவன் தேசிய பாடசாலையாகவும், நகர்ப்புறத்துக்கு அப்பால், எமது கோட்டத்தில் அமைந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

கல்விக் கொள்கைகளுக்கேற்ப கல்வி சார்துறைகள் சகலவற்றையும் தன்னகத்தே கொண்டு தென்மராட்சிப் பிரதேச மக்களின் கல்வித்தேவைகளை பூர்த்தி செய்வதுடன் தேசிய மட்டத்திலிருந்து இங்கு பயில அனுமதி பெற்றுவரும் சகல மாணவர்களுக்கும் இத

[8ம் பக்கம் பார்க்க]

## அதிபர் நல்லாசி

சைவமானது சமூக ஒருமைப்பாடு நீதி வழுவா நெறிமுறை என்பவற்றை அழுத்தமாக நிலைநாட்டுகின்றது. இவை அழுத்தம் பெற கல்வி இன்றியமையாததாகின்றது. இக்கல்வியை வழங்கும் நிலையங்களே பாடசாலைகள் இந்தவகையில், வளம் பல மலிந்த சாவகச்சேரியிலே சைவமும் தமிழும் சிறப்புற நகரின் வடபால் அமைந்துள்ள சாவகச்சேரி இந்துக்கல்லூரி ஒரு தேசியப் பாடசாலையாக தரமுயர பல்லாற்றாலும் உதவிய பெரியார்களோடு சேர்ந்து நாமும் புளகாங்கிதமடைகிறேன். தாபகர் தாமோதரனாரின் கனவு நனவாகும் நாள் இதுவாகும்.

நெருக்கடிகள் மிகுந்த இக்கால கட்டத்தில் ஆசிரியர்களின் சேவை மனப்பாங்கும், மாணவர்களின் விடா முயற்சியும் பெற்றோரின் ஒத்துழைப்பும் பழைய மாணவர்களின் பங்கும் பெரியோரின் ஆசியுமே இக்கல்லூரி உயர்வு பெற உதவியது என்றால் மிகையாகாது

எதிர்காலத்திலும் இக்கல்லூரி மேலும் பல வளங்கள் பெற்றுத் தென்மராட்சியின் தொன்மையைப் பேணிப் பாதுகாத்து வீறுநடைபோட வேண்டுமென எல்லாம் வல்ல இறைவனை வேண்டுவதோடு எனது நல்லாசிகளையும் உரித்தாக்குகிறேன்.

கு. சந்திரசேகரா
(அதிபர்)

## பொருளாளர் ஆசியுரை

யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி இன்று தேசிய பாடசாலையாக தரம் உயர்ந்து புகழ் ஒளி பரப்பி நிற்கிறது.

இக்கல்லூரி இன்று பல மாடிக் கட்டடங்களையும் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்களையும் தலை சிறந்த ஆசிரியர் குழாத்தையும் விஞ்ஞானகூடம், மனையியல் கூடம், விவசாய பீடம், நூலகம், சாரணியம்

(8-ம் பக்கம் பார்க்க)

## தேசியமாய் உயர்ந்துவிட்ட தென்மராட்சி இந்துவே!

தேசியமாய் உயர்ந்துவிட்ட
தேசத்து அன்னையே
தென்மராட்சி இந்துவே
வாசமுடன் இதழ் பரப்பி
ஓசையுடன் தமிழ் பரப்ப
பாசமுடன் வாழ்த்துகிறோம்

★

இந்துவே.........
இந்து அன்னையே......
அந்நிய இராணுவம்
அகலத் தன் காலை விரித்து
அன்னை பூமியை மிதித்தபோது...
அன்னையே......
உன்மீதும்—அந்த
சிங்களக் கால்கள் பட்டனவே
அம்மணிகள் பல கூட
அந்நியனால்......
அடித்து நொருக்கப் பட்டதே
இந்துவே......
இந்து அன்னையே...
நீ சிந்திய கண்ணீர்
நீதியைத் தந்ததால்
ஆதிக்க வெறியர்கள்
அயலிடம் சென்றார்கள்

★

அந்நியன் அழிப்பினால்
அங்கங்கள் அடிபட்டு
அலங்கோலமான உன்னை
நல்லோரும்......
வல்லோரும்......
நலன் விரும்பும் பெரியோரும்...
அங்கங்களைச் சுகமாக்கி
அலங்காரம் பல செய்து
பொங்கி வந்த உன்
கண்ணீரையும் துடைத்து
புதுப்பொலிவும் தந்து
பூரித்து நின்றனரே

★

இந்துவே......
இந்து அன்னையே...
அறிவுக் கடலே... நீ
ஊட்டிய அறிவுடன்
உயர்ந்த மண்பற்றையும்
ஊட்ட மறந்தனையோ?
அதனால்தான்
அவர்கள்...
உன்னை மறந்து...
ஊரை மறந்து...
உரிமை மறந்து...
உற்றாரை மறந்து...
உறவையும் மறந்து
உலகமெல்லாம்
அடிமைகளாய்
அலைகிறார்களோ?

மண்பற்றைச் சுவைத்த—உன்
மைந்தர்கள்...இன்று
மண்ணின் மைந்தர்களாக...
வீரப் புதல்வர்களாக...
விடுதலை வீரர்களாக...
வித்தாக வீழ்ந்து...மாவீரர்களாக...
வீரத்தாயின் புதல்வர்களாக...
வீர இந்துத் தாயின் புதல்வர்களாக
வீர நடை போடுகிறார்களே.

★

வீரத்தாயே...
வீர இந்து அன்னையே...
அயல் மண்ணில்
அடிமைகளாய் ஒரு கூட்டம்
தாய் மண்ணில்
தமிழுக்காய் ஒரு கூட்டம்
அடிமைகளாய் அலைபவர்களால்
தலை குனியும் இந்துவே—நீ
தமிழுக்கு விலையாகும் மைந்தர்களினால்
தலை நிமிர்ந்து நிற்கிறாய்.
வீரத் தாயாக...
விடுதலை அன்னையாக—நீ
தலை நிமிர்ந்து நிற்கிறாய்.

★

வீரத்தாயே...உன்
வீரம் கண்டுதான்
வீணர்கள்......
விண்ணிலிருந்து குண்டுகளை உன்மீது
வீசினரோ......
வீசிய குண்டுகள்
வீழ்ந்து வெடித்ததால்
இடுப்பில் ஒரு காயம்
இருந்தும்...
தடுக்கி நீ விழவில்லை
நிமிர்ந்த தலையுடன்
உயர்ந்து நிற்கிறாய்

தென்மராட்சி இந்துவே
தேசிய இந்துவே......
உன்னை வளர்த்தோர் பலரம்மா
உன்னை ஆண்ட அதிபர்கள்......
உன் பணி செய்த ஆசான்கள்.....
உன் அறிவு பெற்றோர்......
நன்றியுள்ள நல்லவர்கள்......உன்
நலன் விரும்பும் நல்லோர்கள்...
எல்லோரும் நலம் வாழ
நல் ஆசி கூறுமம்மா

கு. தவராஜசிங்கம்
சாவகச்சேரி

## ஈழத்தில் இக் கல்லூரி முதலிடம் பெறவேண்டும்

தமிழீழத்தாய் பெற்றெடுத்த இந்த ஈழத்தில் அண்மையில் தேசிய பாடசாலை எனப் பெயர்தாங்கி வளர்ந்து வரும் ஓர் பாடசாலை தென்மராட்சிப் பகுதியில் உள்ளதென்றால் மிகையாகாது நாம் எல்லாம் கண்கலங்கி விடுதலை இன்றிக் குடிகொள்ளும் இந்நாளின் எந்நாளும் உவகை பூக்கும் மாணவர்களைக் கொண்ட இப்பாடசாலையின் தந்தை எனப்போற்றப்படும். சந்திரசேகரா கடமையாற்றிய இக்காலத்தில் இப் பாடசாலை தேசிய பாடசாலையாக விதந்திடப்பட்டது.

ஈழம்பெற்ற மாணவர் செல்வங்கள் தாம் விரும்பி உறையும் இப்பாடசாலையானது பல மாணவ தலைவர்களையும் கண்ணற்ற ஆசிரியர்களையும் பெரிய கட்டடங்களையும் சமூக சேவைக்கும் தயாரான நிலையில் உள்ள சாரணர் படையையும் மாணவர்களின் அறிவுக்களஞ்சியமாகத் திகழும் நூலகத்தையும் மற்றும் விஞ்ஞானபீடம் ஆகியவற்றைத் தாங்கியுள்ளதுடன் ஈழத்தின் தென்மராட்சியில் ஒரு விளையாட்டுத் திடலாகத் திகழும் ஒருமைதானத்தையும் கொண்டுள்ளது.

இக்கல்லூரி கல்வியின் மதிப்பிலும் ஏனைய பெறுபேற்றுகளின் அடிப்படையிலும் ஈழத்தில் முதலிடம் பெறவேண்டும் எனவும் வாழ்த்துகிறேன்.

பு சுந்தரம்பிள்ளை
(பிரதேச செயலர்
தென்மராட்சி)

## முன்னாள் அதிபர் ஆசிச் செய்தி

யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி இன்று தேசிய கல்லூரியாகத் தரமுயர்த்தப்பட்டதை யிட்டுப் பெருமையடைகிறேன்

இக்கல்லூரி ஒருதனிப்பட்ட நபரினுடைய முயற்சியால் வளர்ந்ததன்று. தென்மராட்சி பச்சிலைப்பள்ளி, கரைச்சிப் பகுதி மக்கள் அனைவரும் இக்கல்லூரியின் வளர்ச்சிக்கு அயராது உழைத்தனர். எதிர்காலத்திலும் இவர்கள் அனைவரும் தளராது ஒத்துழைப்பு நல்கி மேன்மேலும் வளர்ச்சியடையச் செய்ய வேண்டுமென்று வாழ்த்துகிறேன்.

பூ. வெற்றிவேலு
(முன்னாள் அதிபர்)

## செயலாளர் பாராட்டு

1902-ம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட இப் பாடசாலையில் 1950-ம் ஆண்டு தை மாதம் மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தியாசாலையிலிருந்து ஆங்கிலக் கல்விக்காக புதிய மாணவனானேன். அப்பொழுது அதிபர் திரு முத்துக்குமாரு அவர் காலத்தில் 50 களில் திரு வி. குமாரசாமி வகிலமையினால் 'ஏ' பாடசாலையாகி அதன் பின் திரு. ஏ. எஸ். கனகரத்தினம், அமரர் ஏ. மண்டலேஸ்வரன், அமரர் அந்தையா, அமரர் வைத்திலிங்கம் ஆகியோர் அதிபர்களாகி அதிபர் பூ. வெற்றிவேலு பரீட்சைப் பெறுபேறுகளிலும், கட்டிடங்களிலும் பாடசாலையின் புதிய இறப்பாகி பல புலமைப் பரிசில்

(8ம் பக்கம் பார்க்க)


## இம்மலர் சிறப்புடன் வெளிவர உதவிய அன்பர்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| மக்கள் கவுஸ் 20, யுபிலி பஜார் யாழ்ப்பாணம். | A. K. S. ஜோட்டேஸ் பிரதானவீதி, சாவகச்சேரி. | V. M. K. நகை மாளிகை பிரதான வீதி சாவகச்சேரி. | "சீசன்ஸ்" நவீன சந்தை, சாவகச்சேரி. | வதனு டிஸ்பென்சரி பஸ் நிலைய வீதி, சாவகச்சேரி. |
| ஸ்ரீ விக்கினேஸ்வரா களஞ்சியம் பிரதான வீதி, சாவகச்சேரி | முருகன் அரிசி ஆலை பிரதான வீதி, சாவகச்சேரி | மங்கள அழகுசாதனம் பிரதான வீதி, சாவகச்சேரி. | 'ரெலிகோணர்' நவீன சந்தை, சாவகச்சேரி. | ஓர் வர்த்தக அன்பர் சாவகச்சேரி. |
| | இராசம் அரிசி ஆலை பிரதான வீதி, சாவகச்சேரி. | விமலாஸ் நவீன சந்தை, சாவகச்சேரி. | 'மம்மி டடி' பிரதான வீதி, சாவகச்சேரி. | ஜெயமதி ஸ்ரோர்ஸ் 290/291, பிரதான வீதி, சாவகச்சேரி. |

இப்புத்தாண்டு புதுயுகம் நோக்கிப்
பறந்து வரும்

**சிறிமுக வருடமே வருக! வருக!**

இப்புத்தாண்டு அனைவருக்கும்
சமாதானமும், சகவாழ்வும், சுபீட்சமும் பொங்கும்
புதுயுகமாக அமையட்டும்
அன்பர்கள், நண்பர்கள்,
வாடிக்கையாளர்கள், ஆதரவாளர்கள்,
அனைவருக்கும் எமது புதுயுகம் நோக்கிய

**புது வருட வாழ்த்துக்கள்**

★ உங்கள் இல்லங்களில் நடைபெறும் மங்கள கரமான நிகழ்ச்சிகளை இனிதே வீடியோ (மிக்ஸிங்) படமாக்கிடவும்.

★ நெஞ்சில் நிலைக்கும் பழைய, புதிய இனிமைப் பாடல்களை உங்கள் எண்ணம் போல் ஓடியோ ஒளிப்பதிவு செய்து கொள்ளவும்.

★ வீடியோ படக் கசட்டுக்களை வாடகைக்கு பெற்றிடவும்.

# சுப்பலோ வீடியோ ஓடியோ சென்ரர்,

198/5, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(மிக்ஸிங் செய்து கொடுக்கப்படும்)


சாவகச்சேரி

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

தாபனம் ஒரு வரப்பிரசாத மாக எதிர்காலத்தில் பரிண மிக்க வேண்டுமென வாழ்த்து கின்றேன்.

பொ வீரபத்திரன்
(பிரதிக் கல்விப்பணிப்பாளர்
கோட்டக்கல்வி அலுவலகம்
சாவகச்சேரி)

செயலாளர்

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

நிதியங்களையும் உருவாக்கி இப்பாடசாலை தேசிய பாட சாலை ஆவதற்கு வித்திட் டார். அதனை அதிபர் திரு. கே. எஸ். குகதாசன் தொடர் ந்து வளர்த்தார்.

கடைசியாக 92 ஐப்பசியில் எமது வேண்டுகோள் மாகாண அமைச்சின் சிபார் சுக்கு அனுப்பப்பட்டுள்ள தாக அறிவித்தார்கள். 10-2-93 ன் கடிதப்படி 5-2-93 தொடக்கம் எமது பாடசாலை தேசிய பாடசாலையாக்கப்பட் டுள்ளது.

இப்பாடசாலையில் கற் பித்த கற்பிக்கின்ற அதிபர் கள், ஆசிரியர்கள், கற்கின்ற மாணவர்கள் அனைவரையும் அவர்களின் உழைப்பால் தான் எம் பாடசாலை தேசி யத்தை எட்டிப்பிடித்தபெரு மையைக் குறிப்பிட்டுக் காட் டிப் பாராட்டி அவர்கட்கும் என் நன்றிகளைக் கூறுகின் றேன்.

சு. சி. அருளானந்தம்
(கௌரவ செயலாளர்
பழைய மாணவர் சங்கம்)

பொருளாளர்

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

பரியோவான் முதலுதவிப் படை போன்ற பலவேறு அம் சங்களைத் தன்னகத்தே கொண்ட தென்மராட்சியில் தன்னிகரில்லாத கல்விச் சேவையாக இருபதாம் நூற் றுண்டின் இறுதித் தசாப்தத் தலே மிளிர்ந்துகொண்டு இருக் கின்றது.

இக்கல்லூரியின் உயர்ச்சிக் கும் வளர்ச்சிக்கும் தங்கள் அனைவரதும் பங்களிப்பை நாடி நிற்கும்.

க. பாலகிஷ்ணன்
(பொருளாளர்)

அரசுக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

படையினரால் தடுப்புக்காவ லில் வைக்கப்படும் இளைஞர் களில் பலர் மர்மமான முறை யில் மரணமாகி வருவதை எதிர்த்தே இந்த ஆர்ப்பாட் டம் நடத்தப்பட்டது.

தடுப்புக் காவலில் வைக்கப் பட்டுள்ள இளைஞர்களின் உற வினர்களும், நண்பர்களும் மற்றும் ஆதரவாளர்களும் இந்த ஆர்ப்பாட்டத்தில் பெருமளவில் கலந்து கொண் டனர்.

இதேவேளையில் கொழும்பு பல்கலைக்கழகத்தில் சுதேச வைத்தியபீட மாணவர்கள் மேற்கொண்டு வரும் உண்ணா விரதப் போராட்டம் தொடர் ந்து நடைபெறுவதாகவும், புத்தாண்டு தினங்களிலும் இந்தப் போராட்டம் தடை படாமல் நடக்குமெனவும் தெரிவித்துள்ளனர்.

பல்கலைக் கழக மாணவர்கள் தெரிவித்துள்ளனர் (இ)

## கைவிசேஷம்

(யாழ்ப்பாணம்)

புத்தாண்டை முன்னிட்டு இலங்கை வங்கி மேற்தரக் கிளை, இன்று புதன்கிழமை காலை 9-00 மணி முதல் 11-00 மணி வரை கொடுக்கல் வாங் கல்களுக்காகத் திறந்திருக் கும்.

இன்று வைப்பிலிடும் வாடிக் கையாளர்களுக்கு கைவிசேஷ மும் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (மீ)

சிறுவன்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சென்று இளநீர் பறித்துக் குடித்ததையடுத்து தோட்ட வளவு உரிமையாளர் இறந்த வருடன் சென்ற சிறுவர்களை பலவந்தமாகப்பிடித்து கடுமை யாகத் தாக்க முற்பட்டவேளை யில் இறந்தவரைத்தவிர ஏனை யோர் ஓடிவிட்டதாக தெரி விக்கப்படுகிறது.

மாலைவரையில் சிறுவனை பெற்றோர் தேடிய பின்னர் அவர்கள் காவல்துறையினரி டம் முறையிட்டனர்.

நேற்றுக் காலை சிறுவனது சடலம் கிணற்றினுள் காணப் பட்டதையடுத்து காவல்துறை யினர் சடலத்தைப் பொறுப் பெடுத்து, நேற்றுப்பகல் யாழ். வைத்தியசாலையில் பிரேத பரி சோதனைக்காக ஒப்படைத் துள்ளனர். (56)


இருபத்திரண்டு கரட் தங்கம் போல
புத்தாண்டில் ஜொலிக்க அனைருக்கும்

# இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்



நதியாவின் நகைகள் காலத்தால் அழியாதவை.
கண்கவர் தங்க. வைர நகைகளை
மாற்றுக் குறையாத தங்கத்தில் வார்த்துத் தருபவர்கள்.
குறித்த தவணை, நியாயமான விலை, வர்ண வேலைப்பாடு
அனைத்துக்கும் உத்தரவாதம்.

# நதியா ஜுவல்லறி

(ஸ்ரான்லி வீதிச் சந்தி)
இல. 02, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


யாழ். செஞ்சிலுவைச் சங்க
உபதலைவர்

**திரு. க. புவனேந்திரன்**
அவர்களின்
படுகொலைக்காக

சிறிலங்கா அரசைக்கண்டித்தும்
சர்வதேச யுத்த விதிமுறைகள்
பேணப்படுவதை உறுதிப்படுத்துமாறு
சர்வதேச செஞ்சிலுவைச்சங்கத்தைக் கோரியும்
சமூகசேவை அமைப்புக்களின் தொண்டர்களும்
பணியாளர்களும் நடாத்தும்

## ஆர்ப்பாட்டப் பேரணி

காலம்: 16-04-93 வெள்ளிக்கிழமை
காலை 9-00.மணி
இடம்: நல்லூர் கந்தசுவாமி
ஆலய முன்றல்

மக்கள் பல நெருக்கடிகளுக்கு உள்ளாகியுள்ள வேளையில் அவர்களுக்கான சேவைகளில் ஈடுபட்டு வருகின்ற சமூகசேவை அமைப்புக்களின் தொண்டர்கள் பணியாளர்கள் அனைவரும் தங்கள் தங்கள் சீருடைகள் அடையாளச் சின்னங்களை அணிந்து பேரணியில் கலந்து கொண்டு எமது அதிருப்தியைத் தெரிவிக்க அணிதிரள்வோம்.

செயலாளர்,
சமூக சேவை அமைப்புக்களின்
தொண்டர்கள் பணியாளர் ஒன்றியம்

14-04-93. (ஏ-3053)


பிறந்துவிட்ட புத்தாண்டு தமிழ் இனத்தின் விடிவுக்கு வழிவகுக்குமென வாழ்த்துகிறோம்!
**எங்கும் எவருக்கும் நிதான விலையில் ஆங்கில மருந்து வகைகளை**
**வாங்குவதற்கு உச்சரிக்கும் ஒரே பெயர் பெற்ற ஸ்தாபனம்.**

# எஸ்.ரி. மெடிக்கல்ஸ்

490, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(ஆஸ்பத்திரி முன்பாக)

★ ரேஸ்ரி மென் பானங்கள் - ஒறேஞ், ஸ்பெசல் லெமன், நன்னாரி, கிறேப்ஸ்


இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1993ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 14-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News paper at the Genneral Post office, Sri Lanka under Licence Number B/10336/B